## முன்னாள் இந்திய ஜனாதிபதி

# சஞ்சீவரெட்டி மறைவுக்கு சட்டசபை அனுதாபம்

சென்னை, ஜுலை. 17- முன்னாள் ஜனாதிபதி சஞ்சீவரெட்டியின் மறைவுக்கு சட்டசபையில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அனைத்துக் கட்சி தலைவர்கள் அவருக்கு புகழ் அஞ்சலி செலுத்தினார்கள்.

### 2 நிமிடம் மவுனம்

தமிழக சட்டசபை நேற்று கூடியது. சபை தொடங்கியவுடன் சபாநாயகர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் எழுந்து முன்னாள் உறுப்பினர்கள் ஏ.பி. பழனியப்பன், ஆர். ஜீவரத்தினம், எஸ்.டி. ஆதித்தன் ஆகியோர் மறைவு குறித்த இரங்கல் குறிப்புகளை அவையில் அறிவித்தார்.

ஏ.பி. பழனியப்பன் 1977 முதல் 1980 வரையில் ஒட்டன் சத்திரம் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார் என்றும், ஆர். ஜீவரத்தினம் 1962 முதல் 1967 வரையில் வேலூரில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டும், 1984 முதல் 96 வரை அரக்கோணம் பாராளுமன்ற தொகுதியில் இருந்து 3 முறை தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றத்தக்க வகையில் பணியாற்றினார் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

சுதந்திர போராட்ட வீரரான எஸ்.டி. ஆதித்தன் 1954 முதல் 57 வரையில் திருச்செந்தூர் ஒருங்கிணைந்த சட்டமன்ற தொகுதியில் இருந்தும், 1958 முதல் 64 வரையிலும் 1967 முதல் 1976 வரையிலும் மேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அரும் பணியாற்றினார் என்று சபாநாயகர் குறிப்பிட்டார். மறைந்த இந்த உறுப்பினர்களை இழந்து துயரும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் 2 நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்றனர்.

தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி சஞ்சீவரெட்டியின் மறைவுக்கு இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்து அவை முன்னவரான அமைச்சர் அன்பழகன் பேசினார்.

### கருணாநிதி

இந்த தீர்மானத்தை முன்மொழிந்து முதல் - அமைச்சர் கருணாநிதி பேசியதாவது:-

சஞ்சீவரெட்டி இந்த மாநிலத்திலேயே, இதே தலைமை செயலகத்திலேயே அமைச்சராக வீற்றிருந்த காலம் ஒன்று இருக்கிறது.

### பாச உணர்வு

1989-ம் ஆண்டில் கழக ஆட்சி நடந்த போது நீலம் சஞ்சீவரெட்டி சென்னைக்கு வந்து இருந்தார். அப்போது அவர் என்னிடம் தெரிவித்த ஒரே ஒரு விருப்பம், தான் அமைச்சராக இருந்த அறையைப் பார்க்க வேண்டும் என்பதுதான். நானும், பேராசிரியரும் மற்ற அமைச்சர்களும் அவர் தங்கி இருந்த இடத்தில் இருந்து கோட்டைக்கு அழைத்து வந்தோம். அவர் அமைச்சராக இருந்தபோது தங்கி பணியாற்றிய அறைக்கு அழைத்து சென்று காட்டியபோது அங்கு அவர் நின்ற நிலையிலேயே நெகிழ்ந்து போய் இருந்தார். சற்று நேரம் அந்த நாற்காலியில் உட்கார்ந்து விட்டு எழும்புகிறேன் அப்பா என்று என்னிடம் கூறிவிட்டு அவ்வாறே செய்தார். அந்த அளவில் பாச உணர்வை மனதில் பதிய வைத்து இருந்தார்.

### சிறைப்பறவை

சுதந்திர போராட்டத்தின் போது எத்தனை முறை சிறை சென்றார் என்று அவருக்கும் தெரியாது. நமக்கும் தெரியாது. அந்த அளவுக்கு சிறைப்பறவையாக தன்னை ஒப்படைத்து இருந்தார்.

காமராஜர் படத்திறப்பு விழாவின்போது இப்போது எதிர்க்கட்சி தலைவர் அமர்ந்து இருக்கும் இடத்தில் நானும், நான் அமர்ந்து இருக்கும் இடத்தில் முதல் - அமைச்சராக எனது அருமை நண்பர் எம்.ஜி.ஆரும் அமர்ந்து இருந்தோம். அப்போது காமராஜர் படத்தை திறந்து உரையாற்றிய சஞ்சீவரெட்டி ஆற்றிய உரை முழுவதுமாக தனக்கு கிடைக்கவில்லை என்று எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டார். அது விழா நிகழ்ச்சி என்பதால் சட்டமன்ற ஏட்டில் பதியப்படவில்லை. எதிர்க்கட்சி தலைவர் பேசியவுடன் நான் சஞ்சீவரெட்டியின் பேச்சை கேட்டு வாங்கினேன். அவரது உரையின் சில பகுதிகளை அவையின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன்.

### திருத்தணி பிரச்சினை தீர்ந்தது எப்படி?

பெரிய பிரச்சினைகளையும் மாநிலங்கள் எப்படி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் உரையாற்றியது இங்கே திருநாவுக்கரசு எடுத்துக் காட்டியதைப்போல நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் பயனுள்ள வகையில் இருந்தது. (அந்த நிகழ்ச்சியின் போது சஞ்சீவரெட்டி பேசிய ஆங்கில உரையை முதல் அமைச்சர் கருணாநிதி படித்து காண்பித்தார்)

திருத்தணி அமெரிக்காவுக்கோ, இங்கிலாந்துக்கோ போய் விடாது. இந்த நாட்டில் தான் இருக்கும். ஏதாவது பார்த்து செய் அப்பா! என்று காமராஜரிடம் சொன்னேன். இந்த பிரச்சினை குறித்து நேரு என் கையைப் பிடித்து கேட்டபோது இது சிறிய பிரச்சினை. எங்கள் மீது நம்பிக்கை இருந்தால் இதை காமராஜரிடத்திலும் என்னிடத்திலும் விட்டு விடுங்கள், நாங்கள் தீர்த்து விடுவோம் என்றேன். அனைவரும் ஆச்சரியப்படத்தக்க வகையில் இந்த பிரச்சினை தீர்க்கப்பட்டது. திருத்தணி சென்னையோடும், கும்மிடிப்பூண்டியை சுற்றியுள்ள பகுதிகள் ஆந்திராவோடும் இணைக்கப்பட்டது.

எதுவும் இந்தியாவை விட்டு போய் விடவில்லை. இங்குதான் இருக்கிறது என்று அழகாக, ஆழமாக அன்று சஞ்சீவரெட்டி கூறினார்.

### நெருக்கடி நிலை

அதுமாத்திரமல்ல நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்ட போது அதை எதிர்ப்பவர்கள் அணியில்தான் பெருந்தலைவர் காமராஜரும், சஞ்சீவரெட்டியும் இருந்தனர். அப்போது சஞ்சீவரெட்டி என்னை சந்தித்து விட்டு திருமலைப்பிள்ளை ரோட்டில் உள்ள தலைவர் காமராஜர் வீட்டுக்கு செல்வார். நெருக்கடி நிலையில் இருந்து மீட்க, விவாதிப்பதற்காகவும், சிந்திப்பதற்காகவும் என்னை சந்திப்பார்.

அப்போது நானும் அமைச்சர்களும் பதவி விலகப் போகிறோம் என்று கூறியபோது, அவசரப்படாதே, காமராஜரை கேட்டு சொல்கிறேன் என்றார். அதன்படி காமராஜரிடம் கலந்து பேசி விட்டு மீண்டும் எங்களிடம் கூறினார். இப்போது இந்தியாவில் சுதந்திர காற்றை சுவாசிக்கும் இடம் தமிழ்நாடு மட்டும்தான். அதையும் கெடுத்து விடாதே என்று காமராஜர் சொன்னதாக கூறினார். அதன் பிறகு நானும் அமைச்சர்களும் பெருந் தலைவர் காமராஜரை சந்தித்தபோது அவரும் இதே கருத்தை கூறினார்.

அதன்பிறகு . இந்த சட்டமன்றத்தில் பெருந்தலைவர் காமராஜர் படத்தை திறக்க வந்த போது எதிர்க்கட்சி தலைவர் கூறியது போல தன்னை அழைத்து வந்து காமராஜர் படத்தை திறக்க வைத்த எம்.ஜி.ஆர். பற்றி அதிகம் பேசாமல் என்னைப்பற்றி பேசினார். அதற்காக எனது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். வருத்தப்படவில்லை. அவரது முகத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. அந்த அளவுக்கு சிறந்த அவையாக இந்த அவை நடைபெற்றது என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

### சஞ்சீவரெட்டியின் வருத்தம்

காமராஜர் எளிய வாழ்க்கை வாழ்ந்தார், சாதாரண மனிதராக வாழ்ந்தார், நாட்டைப் பற்றி கவலைப்பட்டார், நெருக்கடி நிலையை எதிர்த்தார். இப்போது பலரும் எதுவும் பேசலாம், ஏனெனில் பதில் சொல்ல காமராஜர் இல்லை. நெருக்கடி நிலை பற்றி கவலையோடு இருந்தார் என்று இதே அவையில் சஞ்சீவரெட்டி அன்று பேசினார்.

காமராஜர் மறைந்தவுடன் உடனடியாக சென்னைக்கு வர முயற்சித்தேன். சாதாரண சஞ்சீவரெட்டிக்கு எப்படி உடனடியாக விமான டிக்கெட் கிடைக்கும். எப்படியோ தாமதமாக வந்தேன். விமான நிலையத்தில் இருந்து இறுதியாத்திரை நடத்த இடத்துக்கு கருணாநிதி என்னை அழைத்து சென்றார். காமராஜர் மறைவுக்கு அனந்தப்பூரில் இரங்கல் கூட்டம் நடத்த எனக்கு அனுமதி தரப்படவில்லை. அனுமதி தராவிட்டாலும் கூட்டத்தை நடத்தினேன். ஆனால் பத்திரிகையில் வரவில்லை. சென்னையில் நான் இந்த கூட்டத்தை நடத்தி இருந்தால் முதல் - அமைச்சர் கருணாநிதி அனுமதி வழங்கியிருப்பார், பத்திரிகைகளிலும் வர செய்து இருப்பார் என்று உள்ளம் உருக அன்று இந்த அவையில் சஞ்சீவரெட்டி பேசினார்.

### போற்றுவோம்

அன்று அவர் என்னை பாராட்டி பேசியது நெருக்கடி நிலை கொடுமையை எடுத்துக் காட்டவே கூறினார் என்றே எடுத்துக் கொள்கிறேன்.

அவர் உருவம் நம் முன்னால் இல்லாவிட்டாலும் அவர் உள்ளத்தில் இருந்து வந்த கருத்துக்கள் எப்போதும் நம்மோடு தான் இருக்கிறது. அந்த மாமனிதரை, 6-வது குடியரசு தலைவரை, தேச தியாகியை, விடுதலை போராட்ட தலைவரை என்றென்றும் மனதில் வைத்து போற்றுவோம். அவரது புகழ் என்றென்றும் நிலைத்து இருக்கும்.

மேற்கண்டவாறு முதல்-அமைச்சர் கருணாநிதி பேசினார்.

### ஒத்திவைப்பு

இந்த தீர்மானத்தின் மீது அவை முன்னவர் அமைச்சர் அன்பழகன், எதிர்க்கட்சி தலைவர் சோ.பாலகிருஷ்ணன், சி.பழனிசாமி (வ.கம்.), அப்துல் லத்தீப் (இந்திய தேசிய லீக்), எஸ்.திருநாவுக்கரசு (அ.இ.அ.தி.மு.க.), தீரன் (பாட்டாளி மக்கள் கட்சி), சந்தானம் (பார்வர்டு பிளாக்), வேலாயுதம் (பாரதீய ஜனதா), டாக்டர் கிருஷ்ணசாமி (தேவேந்திரகுல வேளாளர் கூட்டமைப்பு) ஆகியோர் பேசினார்கள்.

அனைத்துக் கட்சி தலைவர்கள் பேசியவுடன், சபாநாயகர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், "சஞ்சீவரெட்டி சென்னை மீது, தமிழ்நாடு மீது அதிக பற்று கொண்டு இருந்தார்" என்று கூறினார்.

சஞ்சீவரெட்டியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் 2 நிமிட நேரம் மவுனமாக எழுந்து நின்றனர். மறைந்த சஞ்சீவரெட்டியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவை நிகழ்ச்சிகள் அதோடு ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜன் அறிவித்தார்.